**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 168/2019**

2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் நாள் சனிக்கிழமை என்பவரது சாட்சியாகிய திருவேங்கடம் **PW.2** இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 21.09.2024

| | | | |
|---|---|---|---|
| Name | : திருவேங்கடம் PW2 | | |
| Father Name | : ஜெயராமன் | Court | : |
| Village | : திருக்கடையூர் | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 60 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2வது சாட்சி ஆவேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். திருக்கடையூர் அமிர்கடேஸ்வரர் ஆலயத்தில் எழுத்தராக பணியாற்றி வருகிறேன். வாசாஆ8 மற்றும் வாசாஆ9 ஆவணங்கள் எங்களது ஆலயத்திலிருந்து கொடுக்கப்பட்ட ரசீதுகளாகும். பொதுவாக தொகை செலுத்துபவரின் கையொப்பம் மேற்படி ரசீதுகளில் பெறுவோம். வாசாஆ8 மற்றும் வாசாஆ9ல் செலுத்துபவரின் கையொப்பம் செல்வி என உள்ளது என்றால் சரிதான். அந்த ரசீதின் அசல் செலுத்தபவரிடமும், அதன் நகல் எங்களிடமும் இருக்கும்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

வாசாஆ8 மற்றும் வாசாஆ9ஐ நான் தான் வழங்கினேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். யாரால் செலுத்தப்படுகிறது என்ற காலத்தில் சுப்பூசி,.

த/பெ.கிருஷ்ணபூசி என்று உள்ளது என்றால் சரிதான். DCB என்பது Demand Collection Balanceஎன்றால் சரிதான். DCBசுப்பூசி, த/பெ. கிருஷ்ணபூசி பெயரில் உள்ளது என்றால் சரிதான். வாசாஆ8 மற்றும் வாசாஆ9 எந்த சர்வே எண்ணிற்காக கொடுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் செல்வி வசிக்கும் இடத்திற்காக கொடுக்கப்பட்டது. செல்வி எந்த சர்வே எண்ணில் உள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. செல்வி எந்த சர்வே எண்ணிற்காக இந்த வழக்கினை தாக்கல்செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. வாசாஆ8 மற்றும் வாசாஆ9 செல்விக்கு எதன் அடிப்படையில் வழங்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது.

செல்வி வழக்கு தாக்கல் செய்த இடத்தை நான் எப்போது கடைசியாக பார்த்தேன் என்றால் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு பார்த்தேன். புல எண்ணின் அனுபவத்தை பொறுத்து என்னால் கூற இயலுமா என்றால் இயலாது. வாசாஆ8 மற்றும் வாசாஆ9 ரசீதுகள் தாவா சொத்திற்கானது இல்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ8 மற்றும் வாசாஆ9 வாதியின் அனுபவத்தை நிரூபிக்கக்கூடிய ஆவணம் இல்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ8 மற்றும் வாசாஆ9ற்கான அடிக்கட்டு ரசீதுகளை நான் கொண்டுவரவில்லை என்றால் சரிதான். வாசாஆ8 மற்றும் வாசாஆ9ல் செல்வி கையொப்பம் செய்தாரா என்பதை அடிக்கட்டை பார்த்தால் தான் சொல்லமுடியும் என்றால் சரிதான். பொதுவாக ரசீதுகள் கார்பன்பேப்பர் வைத்து எழுதப்பட்டிருந்தால் அதன் பிறதிபிம்பம் ரசீதின் பின் பக்கம் தெரியும் என்றால் தெரியாது. புல எண் அனுபவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாததால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல சரியல்ல. வாசாஆ8 மற்றும் வாசாஆ9 எந்த புல எண்ணிற்கு வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாததால் மேற்படி ஆவணங்கள் அனுபவத்தை நிரூபிக்கும் சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.